# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## CC.No. 04/2023
## வழக்கு சாட்சி PW.9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கரியம்மாள்** | தொழில் | : ஓட்டுநர் |
| தகப்பனார் பெயர் | : மணிகண்டன் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : அரசன்கோடை | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 30/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 10.08.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அரசன்கோடையில் வசித்து ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன் . வழக்கின் புகார்தாரர் ரவிச்சந்திரனை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும் , அவர் எனது ஊரைச் சேர்ந்தவர் . தேதி நினைவில்லை . சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இரவு 09.00 மணியளவில் தாண்டிக்குடியில் இருந்து அரசன்கோடை செல்ல வேண்டி சுமார் 10 நபர்கள் மகேந்திரா ஜீப் வாகனத்தில் மூலம் கிளம்பினோம். அந்த ஜீப்பை ஓட்டிய நபர் ஆஜர் எதிரி சின்னையா ஆவர். நாங்கள் பயணித்த ஜீப்பின் பதிவு எண் விபரம் எனக்குத் தெரியவில்லை. நாங்கள் சென்ற வாகனம் அலுஞ்சோடை என்ற மலைப்பகுதி அருகே வந்தபோது நாங்கள் சென்ற ஜீப்பின் ஓட்டுநர் மதுபோதையில் இருந்த காரணத்தால் சாலையின் வலது புற பள்ளத்தில் கவிழ்ந்தது. வாகனம் கவிழ்ந்த போது நானும் , மற்றொரு நபரும் வாகனத்தில் இருந்து குதித்து தப்பித்துக்கொண்டோம். பள்ளத்தில் விழுந்த ஜீப்பில் பயணித்த

அபிராமன் என்ற நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் . ஈஸ்வரன் என்ற நபருக்கு கழுத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டு காயம் அடைந்தார். ஆஜர் எதிரி சின்னையாவிற்கு முகத்தில் அடிபட்டு காயம் ஏற்பட்டது . பன்னீர்ச்செல்வம் என்பவருக்கு முகத்தில் காயமும், சரத்குமார் என்பவருக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. செந்தில் என்பவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டது . வாகனத்தில் இருந்து குதித்து , தப்பித்த நானும், நாகராஜும் தாண்டிக்குடியைச் சேர்ந்த மகேந்திரன், பாலாஜி ஆகியோருக்கு கைப்பேசி வாயிலாக தகவல் சொல்லி வரவழைத்து காயமுற்றோர்களை பிக்கப் வாகனம் உதவி கொண்டு மீட்டு தாண்டிக்குடி அரசு மருத்துவமனையில் சிகிக்சைக்கு கொண்டுசென்று சேர்த்தோம். காயமுற்ற நபர்களை பிறகு அங்கிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். விபத்தில் எனக்கு வலது கை எலும்பு முறிவு காயம் ஏற்பட்டது. காயமுற்ற எங்கள் அனைவரையும் திண்டுக்கல் அரசு மருத்துமனையில் சிகிக்சையில் சேர்த்தார்கள். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் ஒருவாரம் நான் உள்நோயாளியாக இருந்தேன். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் ஜீப்பின் பின்பகுதியில் அமர்ந்திருந்தேன் . எனக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்டத்தெரியுமா என்றால் ஓட்டத் தெரியும். பொதுவாக மலைப்பகுதிகளில் மழைப்பெய்தி , சாலையில் சகதி , சரளை, சாணி ஆகியவற்றில் வாகனத்தை செலுத்தி பிரேக்கை அழுத்தும்போது வாகனமானது பின்னாலோ , முன்னாலோ இழுக்கப்படும் என்றால் சரிதான் . சம்பவ நேரத்தின்போது இரவு மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். சம்பவமானது மழையில் வாகனத்தை செலுத்தி பிரேக் பிடித்து வாகனம் இழுக்கப்பட்டு, பள்ளத்தில் கவிழ்ந்தது என்றால் சரியல்ல. நான் வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்த

காரணத்தால் விபத்து எதனால் நேர்ந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான் . எதிரி சின்னையா காயமுற்று சிகிச்சைக்கு சேர்ந்த சமயத்தில் சின்னையா மதுபோதையில் இருந்ததாக அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எந்தவொரு குறிப்பும் அவரது மருத்துவசான்றில் சொல்லவில்லை என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் அதுகுறித்து தெரியாது . விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான் . விபத்தில் காயமுற்றது தொடர்பாக விபத்து இழப்பீடு வழக்கு ஏதேனும் தொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வாகனத்தில் பயணித்த பிற நபர்கள் விபத்து இழப்பீடு கோரி வழக்கு ஏதேனும் தொடுத்துள்ளார்களா என்றால் அதுகுறித்து தெரியவில்லை. இறந்த நபரின் குடும்பம் இழப்பீடு வழக்கு தொடுத்துள்ள காரணத்தால் அவருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி எதிரி மீது பொய்யான சங்கதிகளைக்கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மதுபோதையில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.08.10 16:23:14 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.